# சங்க அகஇலக்கியங்களில் நெய்தல்திணைப் பாடல்களைப் புனைந்த புலவர்களின் பங்கும் சிறப்பும்

*முனைவர் கோ. பாலமுருகன்*
உதவிப்பேராசிரியர், விவேகானந்த கல்லூரி
திருவேடகம் மேற்கு, மதுரை
https://doi.org/10.5281/zenodo.14383066

## *முன்னுரை*

*சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள் சாதி, சமயங்களைக் கடந்த பொதுமைப் பண்பில் பாடல்கள் பல புனைந்துள்ளனர். மக்களின் வாழ்க்கை நிலைகளை அகம், புறம் என்ற இருநெறிக்கண் பாடிய புலவர்கள் புறத்தை விட அகத்திற்கே முதன்மை கொடுத்துள்ளனர். இதற்குக் காரணம் ஒருவனின் அகவாழ்க்கை சரியாக அமைந்தால்தான் அவனால் புறவாழ்க்கையில் சிறப்பாகச் செயல்பட முடியும் என்ற கருத்தாக்கம் கொண்டமையே ஆகும். சுருக்கமாகச் சொன்னால் அகத்தின் பிரதிபலிப்பே புறம் என்ற கருத்தாக்கம் புலவர்களின் சிந்தைகளில் தோன்றியிருக்கின்றது. அந்த வகையில் சங்க அக இலக்கியங்களில் நெய்தல் திணைப் பாடல்களைப் புனைந்த புலவர்களின் பங்கும் அதன் சிறப்பும் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமையவுள்ளது.*

*பொதுவாகச் சங்க இலக்கியத்தைப் புனைந்த புலவர்களைக் காணும்போது, இவர்கள் இயற்கையில் ஈடுபட்டு அவற்றுள் பொதிந்துள்ள உண்மைகளை நன்கு சித்திரித்துள்ள நிலையினை அறிய முடிகின்றது மிகைப்படக் கூறலான பகுதிகள் மிகமிகக் குறைவு. அவர்கள் பாடுதற்குத் தேர்ந்து கொண்ட தமிழ் அவர்கள் கருத்துக்களைத் தெளிவுற விளக்குகின்றன. அழகும் உணர்ச்சியும் ததும்பும் கருத்தொடு பிணைந்து செல்லும் சொற்களையும் தொடர்களையுமே எடுத்தாளுகின்றனர். மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், சமுதாயப் பழக்க வழக்கங்களையும், அரசியல், வணிகம் முதலிய துறைகளின் இயல்புகளையும், அந்நாளில் வாழ்ந்த தலைமக்களையும், சான்றோர்களையும் பற்றிய பற்பல உண்மை நிகழ்ச்சிகளையும் தத்தம் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். பறவை, விலங்கு, தாவரம், குன்று, மலை, யாறு, இருசுடர், இயற்கைத் தோற்றங்கள் போன்றவற்றையும் இவர்கள் கூர்ந்து உணர்ந்து ஏற்ற இடங்களில் உவமை வாயிலாகவும் பொதிந்து வைத்துள்ளனர். இவற்றால் பண்டைய மக்களின் நிலவியலறிவு, பூதபௌதிகம் பொருட்களைப் பற்றிய சிந்தனை, இயற்கைப் பொருளின் இயல்புகளைக் கூர்ந்து அறிதல் போன்ற அறிவியல் வளர்ச்சிகளையும் காண்கிறோம். வீரமறவரின் பெயரையும் பெருமையையும், போர் பற்றிக் கல்லில் அவர்தம் செயலைப் பொறித்து வைத்த மரபினால் சிறந்த நினைவுகளைப் போற்றிக் காக்கும் பண்பும் புலப்படும். பண்டைய நாளில் சாசனச் சான்றுகள் இல்லாக் குறையைப் போக்கும் வகையில் இந்த இலக்கியப் பாடல்கள் சிறந்த பிரமாணங்களாக உள்ளன.*[1]

*இந்த நிலையில் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கும், பண்பாட்டின் சிறப்பினை எடுத்தியம்புவதற்கும் முதன்மை இலக்கியச் சான்றாக இருப்பவை சங்கச் சான்றோர்களின் படைப்புக்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.*

*சங்க இலக்கியப் பாடல்களின் எண்ணிக்கை 2381 எனவும், அதனை இயற்றிய புலவர்கள் 473 பேர் எனவும், இவற்றுள்*

378 புலவர்கள் 1862 அகத்திணைக்குரிய பாடல்களை இயற்றியுள்ளதாகவும் சுட்டுவர். இவ்அகப்பாடல்களில் களவுக்குரிய 882 பாடல்களை 238 புலவர்களும், கற்புக்குரிய 966 பாடல்களை 233 புலவர்களும் பதிவு செய்துள்ளனர். இவர்களுள்களவுப்பாடல்கள் மட்டும் பாடியோர் 145 எனவும், கற்புப் பாடல்கள் மட்டும் பாடியோர் 1403 எனவும் வ.சுப.மாணிக்கம் தனது "தமிழ்க் காதல்" என்னும் நூலில் குறித்துள்ளார்.

நெய்தல் திணை சார்ந்த பாடல்கள் இயற்றுவதில் 99 புலவர்கள் தங்கள் பங்களிப்பினைச் செய்துள்ளனர். இவர்களுள் அம்மூவனார், இளந்திரையனார், உலோச்சனார், கபிலர், குன்றியனார், சீத்தலைச்சாத்தனார், நன்னாகையார், நெய்தல்தத்தனார், பரணர், வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் போன்ற 10 புலவர்கள் களவு, கற்பு நிகழ்வுக்கான பாடல்களையும்; கயமனார், கருவூர்ப் பூதஞ்சாத்தனார், கல்பொருசிறுநுரையார், சாத்தன், செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன், படுமரத்து மோசிகொற்றனார், மோசி கண்ணத்தனார், கருவூர்ப் பூதஞ்சாத்தனார் ஆகிய 08 புலவர்கள் கற்பு நிகழ்வுக்குரிய பாடல்களையும் இயற்றியுள்ளனர். களவு மற்றும் பெருந்திணைக்குரிய பாடல்கள் மட்டும் பாடியவர் ஆலம்பேரிச்சாத்தனார் என்ற 01 புலவரும்; களவு, கற்பு, பெருந்திணை என்ற நிலையில் பாடல்கள் புனைந்தவர் நல்லந்துவனார் என்ற 01 புலவரும் ஆவர். மற்ற 80 புலவர்கள் களவுக்குரிய பாடல்கள் மட்டும் இயற்றியுள்ளனர். இவர்களுள் அகப்பாடல்கள் மட்டும் புனைந்தவர்களாக 69 புலவர்களும், அகமும் புறமும் சேர்ந்து பாடியவர்களாக 30 புலவர்களும் கண்டறியப்பெற்றுள்ளனர். மேலும் நெய்தல் திணைக்குப் பங்களிப்புச் செய்த 99 புலவர்களில் 37 புலவர்கள் நெய்தல் திணைப்பாடல்கள்மட்டும்புனைந்துள்ளமைக் குறிக்கத்தக்கது. இதில் ஆண், பெண் என்ற இருபாலரும்அடங்குவர். பெண்கவிஞர்களின் எண்ணிக்கை குறித்துத் தமிழறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெண் கவிஞர்களின் எண்ணிக்கையினை உ.வே. சாமிநாதையர் 38 எனவும், எஸ். வையாபுரிப் பிள்ளை 30 எனவும், ஔவை துரைசாமிப்பிள்ளை 34 எனவும், புலவர் கா. கோவிந்தன் 27 எனவும், ஔவை நடராசன் 41 எனவும் குறிப்பிடுகின்றனர்4. இது மேலும் ஆய்வுக்குரியது. இருப்பினும் சஞ்சீவியின் சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை ஐங அ 5 இல் பதிவு செய்யப் பெற்றுள்ள 30 பெண்பால் புலவர்களைக் கருத்தில் கொண்டு, நெய்தல் திணைக்குப் பங்களிப்புச் செய்த பெண்பாற் புலவர்கள் அடையாளம் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளது. ஔவையார், குமிழிஞாழலார் நப்பசலையார், நக்கண்ணையார், நன்னாகையார், போந்தப்ப சலையார், வெண்பூதி, வெண்மணிப்பூதி, வெள்ளி வீதியார் ஆகிய எண்மர் கருதப்பெறுகின்றனர். மேற்கண்ட எண்மர் 17 பாடல்களை நெய்தல் திணைக்குரியதாக யாத்துள்ளனர். இவற்றுள் களவிற்குரிய 16 பாடல்களில் 12 கூற்று தலைவிக்குரியதாகவும், 04 கூற்று தோழிக்குரியதாகவும், கற்பிற்குரிய 01 பாடல் தலைவி கூற்றிலும் அமைந்துள்ளன. வெண்பூதி என்ற புலவரை இருநிலைகளில் குறிக்கப்படுவதுண்டு. வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்று இருப்பதால் இப்புலவரை ஆண்பாலாகவும், வெண்பூதி என்பதைக் கருத்தில் கொண்டு பெண்பாலாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குறிக்கப்பெற்றுள்ள 99 புலவர்களின் பெயர்கள் கீழ்க்காணும் வகையில் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. இதில் மாறுபாடு இருக்க வாய்ப்பும் உண்டு. அண்டர் மகன் குறுவழுதியார் என்ற பெயர் குறுவழுதியார் என்றும்; அம்மூவன் - அம்மூவனார் என்றும்; மதுரை ஆருலருவியநாட்டு ஆலம்பேரிச் சாத்தனார் -ஆலம்பேரிச்சாத்தனார் என்றும்; தாண்டைமான் இளந்திரையன்- இளந்திரையன் என்றும்; கச்சிப்பேட்டு நன்னாகையார் -நன்னாகையார் என்றும்; மதுரை தமிழ்க்கூத்தன் கடுவன் மள்ளனார் - கடுவன் மள்ளனார் என்றும்;

குன்றியன் - குன்றியனார் என்றும்; மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதன் - சேந்தன் பூதனார் என்றும்; மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் -நக்கீரனார் என்றும்; மிளைக்கிழான் நல்வேட்டன் - நல்வேட்டனார் என்றும்; மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் - சீத்தலைச்சாத்தனார் என்றும்; வெள்ளூர்க் கிழார் மகனார் வெண்பூதியார் - வெண்பூதி என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. மேலும், நற்றிணையின் 123-ஆம் பாடலைக் காஞ்சிப்புலவர் இயற்றியதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. மேலும், மாங்குடி மருதனார், மாங்குடிக்கிழார், மதுரைக் காஞ்சிப் புலவர் போன்ற பெயர்கள் அனைத்தும் ஒருவரையே குறிப்பதாகச் சில உரையாசிரியர்கள் சுட்டிச் செல்கின்றனர்.

நெய்தல் திணைப்பாடல்களை இயற்றிய 99 புலவர்களுள் அதிகமான பாடல்களை நெய்தலில் படைத்தவர்கள் மூவராகக் கருதப் பெறுகின்றனர். அவர்களுள் முதன்மையானவர் அம்மூவனார். அதற்கடுத்த நிலையில் நல்லந்துவனார் என்பவரும், மூன்றாவது நிலையில் உலோச்சனாரும் உள்ளனர்.

**அம்மூவனார்**

அம்மூவன், அம்மூவனார் என்ற பெயருடைய இருவரும் ஒருவரேயாவர். மூவன் என்னும் இயற்பெயரே சிறப்புணர்த்தும் அகரத்தை முதற்கண்ணும், ஆர் விகுதியை ஈற்றிலும் பெற்று "அம்மூவனார்" எனப் பாராட்டிக் கூறப்படுகிறது என்று கருதுவது முண்டு. ஆயினும், இவர்தம் பாடலில் தொண்டி, மாந்தை முதலாய சேர நாட்டு ஊர்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பது பற்றி; இவர் சேரநாட்டு மேலைக்கடற்கரையில் இருந்தவரென்று கருதுவதற்கு இடமிருப்பதாலும், இக்காலத்தும் அந்நாட்டில் அம்மு, திம்மு, திப்பு என்னும் பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டு வழங்கி வருவதாலும் இவரது இயற்பெயர் "அம்மூ" வென்றும் இருக்கலாம் என்பர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்.6 மேலும் இவர் சேரன், பாண்டியன் என்னும் முடியுடை வேந்தர் இருவராலும், திருக்கோவிலூரை ஆண்ட காரி என்னும் வள்ளலாலும் ஆதரிக்கப் பெற்றவர் என்பது குறிக்கத்தக்கது.

**பாடல் புனைவின் சிறப்பு**

மிகுதியான நெய்தல் பாடல்களைப் புனைந்த பெருமைக்கு உரியவர் அம்மூவனார். இவர் பாடியனவாக 123 நெய்தல் திணைப் பாடல்கள் உள்ளன. இவற்றுள் தலைவன் கூற்றாக 14 பாடல்களும், தலைவி கூற்றாக 52 பாடல்களும், தோழி கூற்றாக 45 பாடல்களும், பரத்தை கூற்றாக 11 பாடல்களும், பாங்கன் கூற்றாக 1 பாடலும் புனையப்பெற்றுள்ளன. களவுக்காலத்திற்குரிய பாடல்களாக 74-உம், கற்புக்காலத்திற்குரிய பாடல்களாக 49-உம் பதிவு செய்யப்பெற்றுள்ளன. நெய்தல் பாடுவதில் வல்லவரான அம்மூவனார் இந்நிலத்தின் வளங்கள் பலவற்றையும் பதிவுசெய்துள்ளார்.

பண்டைத் தமிழ் மக்கள் தாங்கள் வாழ்ந்த காலங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை முறையாகக் குறித்து வைக்கவில்லை. இவ்வரலாற்று நிகழ்வுகளை இன்று ஓரளவு தெரிந்து கொள்வதற்குச் சான்றாக இருப்பவை இலக்கியங்களே ஆகும். இதற்கு முதன்மையாக விளங்குபவர்கள் புலவர்பெருமக்களே எனில் அது மிகையாகாது. இப்புலவர்கள் புறப்பாடல்களில் மட்டுமின்றி அகப்பாடல்களிலும் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளனர். இந்நிகழ்வு அப்பாடல் எழுந்த காலகட்டங்கள் மட்டுமின்றிப் புலவர்களின் காலகட்டங்களையும் அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

அகத்தில் புறத்தைப் பதிவு செய்த பெருமை அம்மூவனாருக்கும் உண்டு. வரலாற்றுச் செய்திகள் பல இவருடைய படைப்புக்களில் மிளிர்வதைக் காணமுடிகின்றது. சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியும் (ஐங்.171-180), அந்நாட்டின் கண்ணதாகிய மாந்தையும் (நற்.35,395), பாண்டி நாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய கொற்கையும் (ஐங்.185), நடுநாட்டின் கண்ணதாகிய கோவலூரும்

*மற்றும் பூழி நாடும் (குறு.163) இவரால் பாராட்டப்பெற்றுள்ளன. மேலும், இவருடைய பதிவுகளில் நெய்தல் நில மக்களாகிய பரதவர்களின் தொழில்களான மீன்பிடிக்கச் செல்லுதல், பிடித்து வந்த மீன்களைப் பகிர்ந்து கொடுத்தல் (அக.10), முத்துக் குளித்தல், அதனை விற்றல் (ஐங்.195), சங்கு வளை அறுத்தல் (ஐங்.194) என்பன போன்ற செய்திகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. இதன் வாயிலாக அக்காலகட்ட மக்களின் சமூகம் சார்ந்த தொழில் முறைகள், பண்பாடுகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ள இயலுகின்றது. மேலும் உமணர்களின் நிலையில்லா வாழ்க்கை பற்றியதான செய்திகள் (நற்.138);, நெல்லுக்கு நேராக உப்பு மதிக்கப்பட்ட தன்மைகள் (அக.390), நெய்தல் நிலத் தலைவிக்கும், தலைவனுக்கும் இடையே நிகழ்கின்ற களவு, கற்பு நெறிகள், தலைவன் வேற்று ஊரிலிருந்து வருகின்ற செய்திகள், தலைவன் தலைவியை மணம் செய்துகொள்ளத் தலைவியினுடைய தந்தையோடு இணைந்து பணிசெய்ய முற்படுதல்; (அக.280), தலைவியின் தழையாடைக்கு விலையாக ஒரு நாட்டையே வழங்கல் (ஐங்.147), களவின் போது தாய், மேனி வேறுபாடு கண்டு தலைவியை இற்செறிப்பு செய்தல் (குறு.401), தந்தை காவற்படுத்தல், கடற்கெழு செல்வி (தெய்வம்)பற்றியக் கருத்தினை குறிப்பிடல் (அக. 370), குரவை அயர்தல் (ஐங்.181), அலவன் ஆட்டி விளையாடல் (குறு.303), தழையாடை அணிதல் (குறு.125), களவு கொண்ட தலைவன் தமரினை அனுப்பி வரைவு கொள்ள ஏற்பாடு செய்தல், அதற்குத் தலைவி வீட்டார் உடன்படல் (நற்.351), உடன்படாத பொழுது உடன்போக்கு மேற்கொண்டு மணம் செய்து புதல்வனைப் பெற்ற வழி அதனைச் செவிலித்தாய்க் குணர்த்தல் (ஐங்.104), கற்பு வாழ்வில் தலைவன் பிற மகளிரை நாடிய செயல்கள், அதனால் ஏற்பட்ட ஊடல் நிலைகள், புறமகளிருக்கும் தலைவனுக்குமான ஊடல் நிலைகள் (ஐங். 121-128), நெய்தல் நில இயற்கைப் பதிவுகள் என நெய்தல் சமூகம் சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் போன்ற வாழ்வியல் கூறுகளைக் காட்சிப்படுத்தும் பெட்டகமாக இவரின் பாடல்கள் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கதாக உள்ளன. அந்த வகையில் அம்மூவனாரின் பதிவுகள் நெய்தல் சமூகத்தை வெளிப்படுத்தும் நிலையில் அமைக்கப் பெற்றுள்ளமை தெளிவாகிறது.*

*மேலும் மற்ற புலவர்களிலிருந்து நெய்தல் பாடியமையில் இவருடையதனிச்சிறப்புகளை ஐங்குறுநூற்றில் காணப்படுகிற சில பதிவுகளின் வழிச் சுட்டிக்காட்ட இயலும். ஐங்குறுநூற்றில் மொழியப்பெற்றுள்ள தலைவனும் தலைவியும் களவு கொண்டு கற்பு வாழ்க்கைக்குச் சென்ற நிலையில் அவர்கள் இருவரையும் தோழி பள்ளியிடம் துய்த்து வாழ்த்துகின்றமையை (ஐங்.148,149) வேறு நெய்தல் பாடல்களில் காண இயலாது. ''பள்ளியிடம் துய்த்தல்'' என்பது இன்றைய காலகட்டங்களில் ''முதல் இரவு'' நடைபெறும் சூழலைக் குறிக்கும் வகையில் உள்ளன. இந்நிகழ்வில் தோழியின் பொறுப்புணர்வு நன்கு தெளிவுபடுத்தப் பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. அதற்கடுத்த நிலைகளில் நெய்தல் நிலத்தில் பரத்தமைப் பண்பு காணப்படுவதாக மொழிந்துள்ளமையினை நோக்கும் போது இந்நிலத்தில் வாழ்கிற தலைவன் செல்வச் செழிப்புற்று இருந்திருக்கிறான் என்பதை உணரவைக்கிறது. அதுமட்டுமின்றி அப்புறப் பெண்டிரைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமும் இருந்துள்ள தன்மையினைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை,*

***வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்***
***காணிய சென்ற மடநடை நாரை***
***கையறு பிரற்றுங் கானலம் புலம்பந்***
***துறைவன் வரையு மென்ப***
***அறவன் போலு மருளுமா ரதுவே***

***(ஐங்.152)***

*என்ற பாடல் அடிகள், தெளிவுறுத்திக் காட்டுகின்றன. மேலும் காரண காரியத் தொடர்போடு இப்பகுதிக்கு''வெள்ளாங்குருகுப்பத்து'' என்று பெயரிட்டுள்ளமை அம்மூவனாரின்*

*நுண்ணறிவுத் திறனை எடுத்து மொழியும் வகையில் அமைந்துள்ளன. மேலும் "தொண்டிப் பத்து" என்ற பகுதி அந்தாதிப் போக்கில் அமைந்துள்ளமை மேற்குறித்த கருத்திற்கு வலுச்சேர்ப்பதாகவே உள்ளது.*

*அகநானூற்றில் சில பதிவுகளும் இதேபோல் புதுமையானதாக உள்ளன. உப்பு விற்கச் செல்லும் தொழிலைச் செய்யக்கூடிய உமணர் குலப் பெண்ணுக்கும் அந்நிலத் தலைவனுக்கும் காதல் நிகழ்வு ஏற்பட்டதை (அக.140,390) வேறு எந்தப் புலவரும் பதிவு செய்யவில்லை. அதேபோல் நெய்தல் நிலத் தலைவியை மணம் செய்ய நினைக்கும் தலைவன், அவளுடைய தந்தையின் இசைவைப் பெறும் வகையில் (அக.280) செயல்படுகின்றமையை நோக்கும்போது சில கருத்துக்கள் வெளிப்படுவதை உணர முடிகிறது. ஈங்கு தந்தை முதன்மைப் படுத்தப்படுவதோடு மட்டுமின்றிப் "பணிமணம்" என்ற ஒன்று அக்கால நெய்தல் சமூக மக்களின் வழக்கில் இருந்தமையைத் தெளிவுறுத்திக் காட்டியுள்ளது. இதன் வாயிலாக நெய்தல் சமூக மக்களைப் பற்றியதான பல செய்திகளை அறிந்து கொள்வதற்கு அம்மூவனாரின் பாடல்கள் பெரும் துணை புரிகின்றன.*

**நல்லந்துவனார்**

*கலித்தொகையைப் பாடிய ஆசிரியர்களுள் ஒருவர் நல்லந்துவனார். இவர் நெய்தல் திணைக்குரித்தான 33 பாடல்களை இயற்றியுள்ளார். அதுமட்டுமின்றி அகநானூறு, நற்றிணை ஆகியவற்றில் ஒரு பாடலும், பரிபாடலில் 2 பாடலும் ஆக இவருடைய பதிவுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் நெய்தலுக்கென்று அதிகமான பாடல்கள் புனைந்த இரண்டாவது புலவராக நல்லந்துவனார் கருதப்பெறுகிறார்.*

**பாடல் புனைவின் சிறப்பு**

*நல்லந்துவனார் என்ற புலவர் நெய்தல் கலியில் பல புதுமைகளைச் செய்ய முனைந்திருக்கிறார். பெருந்திணை என்ற நிலையில் வைத்து எண்ணப்படுகிற பத்துப் பாடல்களை இவற்றுள் பதிவு செய்திருக்கிறார். பெண்பாலார் மிக்க காமத்தை வெளிப்படுத்துதல் இயலாது என்கிற ஒரு நிலையினை மாற்றி அவர்களும் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பாடல் புனைந்திருப்பது சிறப்பாகக் கருதப் பெறுகிறது. மற்ற அகநூல்களில் புனையப்பெற்றுள்ள நெய்தல் பாடல்களைவிட இரங்கல் உணர்வு இதில் அதிகமாக வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. கடல், மேகம், நிலவு, காற்று, ஞாயிறு, புல்லாங்குழல் போன்ற உயிரில்லா அஃறிணைகளை விளித்துப் பேசவும், கேட்கவும், உணரவும் வல்லவை போலக் கருதி அவற்றுடன் உரையாடித் தன்னுடைய துயரத்தினைத் தீர்த்துக் கொள்ளுவதாக, இயற்கைக்கும் மனிதருக்கும் இடையேயான ஓர் உறவினைப் படைத்துக் காட்டியுள்ளார்.*

*நெய்தல் நிலத் தலைவியை விரும்பும் தலைவன் ஒரு போர் வீரனாகச் சுட்டப் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கதாக உள்ளது. இதனை,*

***நீருள் நிழல்போல் கொளற்கரியள் போருள்***
***அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்***
***மன்றம் படர்வித் தவள்வாழி சான்றீர்***
***(கலி.141,8-10)***

*என்ற பாடல் அடிகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. மேலும் தலைவனை விரைவில் வரைவு மேற்கொள்ளத் தூண்டும் வகையில் அறநெறிகள் பல இவருடைய பாடல்களில் மொழியப்பெற்றுள்ளன. கடற்கரையில் வாழக்கூடிய நண்டுகளின் பண்புகள்கூடத் தலைவனுக்கு இல்லாமையையும், தலைவன் செய்த செயலுக்கு நாணி அத்துறையின் நண்டு வளைக்குள் சென்று மறைவதையும் கலி.131-ஆம் பாடல் அடிகள் காட்சிப்படுத்தி நிற்கின்றன. கூடல் இழைத்துப்பார்த்தல் (கலி.142), சூள்உரைத்தல் (கலி.124,149), சுறாமீன் கோட்டில் ஊஞ்சல் பலகை செய்தல் (கலி.131), மார்பில்; தொய்யில் எழுதுதல் (கலி.125), கணவன்*

இறந்த பின் கற்புடைப் பெண்டிர் வானுலகில் அவரை மீண்டும் தம் கணவனாகப் பெறுதல் (கலி.143) என அக்காலகட்ட மக்களின் வாழ்க்கைக் கூறுகளான பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றைப் புலப்படுத்தும் வகையில் தெளிவுறுத்திக் காட்டப்பெற்றுள்ளன.

### உலோச்சனார்

நெய்தலுக்கென்று அதிகமான பாடல்களைப் பாடிய மூன்றாவது புலவர் உலோச்சனார் என்பவராவார். சமணசமயத்தில் தலை முடியினைப் பறித்தகற்றும் சமயச்சடங்கிற்கு "உலோச்சு" என்று பெயர். இதன் காரணமாக இப்புலவரைச் சமண சமயத் தொடர்புடையவராகக் கருதுவர். இவருடைய பதிவுகளாகச் சங்க இலக்கியத்தில் 35 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 31 பாடல்கள் நெய்தல் திணைக்கு உரியதாக ஆக்கப்பெற்றுள்ளன. இந்நிலைகளைக் காணும் போது நெய்தல் பாடுவதில் இவருக்குள்ள ஈடுபாட்டுத் தன்மையை அறியமுடிகிறது. இப்பாடல்களில் 6 பாடல்கள் தலைவி கூற்றாகவும், 25 பாடல்கள் தோழி கூற்றாகவும், களவுக் குரியனவாக 28 பாடல்களும், கற்பிற் குரியனவாக 3 பாடல்களும் புனையப் பெற்றுள்ளன.

### பாடல் புனைவின் சிறப்பு

மற்ற புலவர்களைக் காட்டிலும் ஒரு படி மேலாக நெய்தல் நில மக்களின் வாழ்க்கையினைப் பதிவு செய்த சிறப்பு உலோச்சனாருக்கு உண்டு. நற்றிணையில் இடம்பெற்ற இவருடைய நெய்தல் திணைப் பாடல்கள் பரதவர்களைப் பற்றிய நுண்ணிய குறிப்புக்கள் பலவற்றைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. பரதவர்களை "உவர்விளை உப்பின் உழாஅ உழவர்" (நற்.331) என்று இவர்களை வேளாண் மக்கள் செய்யும் உழவுத்தொழிலோடு ஒப்புமைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். இந்நிலத் தலைவனைத் "தெண்கடல் நாட்டுச் செல்வன்" (நற்.363) என்று குறித்துள்ளமையிலிருந்து இத்தலைவர்கள் ஒரு நாட்டிற்கே உரிமை பூண்டவர்களாக, ஆட்சியாளர்களாக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடம்தரும் வகையில் அமைந்துள்ளது. திமில் எண்ணி விளையாண்ட நிகழ்வு (நற்.331), திமில் விளக்கம் எண்ணல் (நற்.372), வண்டல் ஆடுதல், வருதிரை உதைத்து விளையாடல், அடும்புக் கொடியின் மலரினைக் கொய்து கொடுத்தல் (நற்.254), மகளிர் சிலம்பு அணிந்திருந்தமை (நற்.363), தலைவியின் களவுக் காலத்தில் ஊர்ப்பெண்டிரால் அலர் தூற்றல் (நற்.223), உடன்போக்கு வலித்தமை (நற்.149), நன்னிமித்தம் பார்த்தல் (நற்.311) போன்ற இந்நில மகளிரின் பழக்கவழக்கங்கள் மிகுதியாகப் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. உமணர்களிடம் உப்புக்கு மாற்றாக நெல்லினைப் பெறல், கடல் நீரில் உப்பு விளைவிக்கும் தன்மை (நற்.254), பரதவர்கள் பயன்படுத்திய வலைகள் (நற். 63, 74), மீன்களைச் சுட்டு உண்டமை (நற்.311) போன்ற தொழில் சார்ந்த செயல்பாடுகளும் தெளிவுறுத்திக் காட்டப் பெற்றுள்ளன. குதிரை என்னும் விலங்கினத்திற்கு உணவு கொடுத்தல் (நற்.254), பெரியன் என்ற மன்னனுடைய யானைப்படையின் வலிமை பற்றியும் (நற்.131) குறித்துள்ளார். அகநானூற்றில் இந்நில மக்களின் குடியிருப்புக்களின் அமைப்பு, குடிச்சிறப்பு (அக.200), தழையாடை அணிந்தமை, குரவையாடல் நிகழ்த்தியமை, அலவன் ஆட்டி விளையாடியமை, ஊசல் கட்டி விளையாடிய நிகழ்வு, புள்ளோப்பிய நிகழ்வு (அக.20), விருந்தயரும் பண்பு (அக.300), கடலினுள் வேட்டம் சென்ற பரதவர்கள் சுறா மீனை எறியுளிக் கொண்டு தாக்கிப் பிடித்த நிகழ்வு (அக.210) தலைவியின் வேறுபாடு கண்டு தாய் இற்செறிப்பு செய்தமை (அக.20), களவில் ஊடல் கொண்டமை (அக.330), களவில் புணர்தல் நடைபெற்றமை (அக.100) போன்ற பல வகையான நெய்தல் சமூக மக்களின் வாழ்க்கை சார்ந்த நிகழ்வுகள் மிகுதியாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளமையினை அறியமுடிகிறது. அதோடு மட்டுமல்லாது

குதிரை என்னும் விலங்கினத்திற்கு இலக்கண நூல் இருந்தமையை,

**நூலமை பிறப்பி னீல உத்திக்**
**கொய்ம்மயிர் எருத்தம் பிணர்படப் பெருகி**
**நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற் றார்க்கை**
**நிரலியைந் தொன்றிய செலவிற் செந்தினை**
**(அக.400)**

எனவரும் பாடல் அடிகள் மெய்ப்பித்து நிற்கின்றன. இவ்வாறான பல பதிவுகளின் வழி உலோச்சனார் நெய்தல் பாடுவதில் நாட்டம் மிக்குள்ளவர் என்பதும், வல்லவர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

## நிறைவுரை

நெய்தல் திணைக்குப் பங்களிப்புச் செய்த புலவர்களில் களவுப் பாடல்கள் பாடியவர்கள்; கற்புப் பாடல்கள் பாடியவர்கள்; களவு, கற்பு, பெருந்திணை பாடியவர்கள்; களவு, பெருந்திணை என்று இரண்டும் பாடியவர்கள் என்ற பாகுபாடுகள் வெளிப்படுத்தப்பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாமல் இவர்களுள் அகப்பாடல்கள் மட்டும் பாடியவர்கள், அகம் புறம் இரண்டும் சேர்ந்து பாடியவர்கள் என்ற நிலையில், நெய்தல் பாடல்கள் மட்டும் புனைந்த புலவர்களின் பாகுபாடும்; பெணபாற் புலவர்களின் பாகுபாடும்; அவர்களுள் களவு கற்புப் பாடல்கள் புனைந்தவர்களின் பாகுபாடு என இனம் காணப்பட்டு வெளிக்கொணரப் பெற்றுள்ளன. பெரும்பான்மையான நெய்தல் பாடல்களை இயற்றிய முதல் மூன்று புலவர்கள் பற்றியும், அவர்கள் பாடல்கள் புனைந்த நிலைகள் குறித்தும், தனிச்சிறப்புக்கள் குறித்தும் இக்கட்டுரை ஆய்ந்துரைத்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. மு. சண்முகம்பிள்ளை, சங்கத்தமிழர் வாழ்வியல், பக்.41- 42.
2. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப.65.
3. வ.சுப. மாணிக்கம், மு.நூ, ப.68.
4. ந.முருகேசபாண்டியன், அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் சங்கப் பெண் கவிஞர்கள் முதல் ஆண்டாள் வரை, ப. 14.
5. சஞ்சீவி.ந.,சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை, பக்.112-113.
6. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு -1, ப.287

## Footnotes

1. M. Shanmugampillai, Biography of Sangattamizhar, pp. 41&42.
2. V. Suba. Manikkam, Tamil Love, p.65.
3. V. Suba. Manikam, M.Nu, p.68.
4. N.Murugesapandian, From Sangam Women Poets to Andal in Atait Tingal Avvennilavil,
5. p. 14
6. Sanjeevi.N., Catalog of Associational Literature Research, pp. 112&113.
7. Olavai Su. Duraisamy Pillai, Ainkuruhundu&1, p. 287

## துணைநூற்பட்டியல்கள்


1. அண்ணாமலை.சுப.,(உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும், கோவிலூர் மடாலயம், கோவிலூர். 2003.
2. சஞ்சீவி.ந., -சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை.2008.
3. சண்முகம் பிள்ளை.மு.,-சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. இ.ப : 2004.
4. சாமிநாதையர்.உ.வே., (உ.ஆ) - குறுந்தொகை மூலமும்உரையும் டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம் சென்னை. 2009.
5. சிவசுப்பிரமணியன்.வே.மயிலம்., - அகநானூறு களிற்றியானை (உ.ஆ) நிரை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.ச ா.நூல் நிலையம், சென்னை. 1990.
6. அகநானூறு மணிமிடை பவளம் மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 1990.
7. அகநானூறு நித்திலக் கோவை

*மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 1990.*

8. *துரைசாமிப் பிள்ளை.சு.ஔவை., - ஐங்குறுநூறு -1, (உ.ஆ) செவ்விலக்கியக் கருவூலம், தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை. 2008.*
9. *மாணிக்கம்.வ.சுப, -தமிழ்க் காதல், ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை. 2009.*
10. *முருகேச பாண்டியன்-அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில் சங்கப் பெண் கவிஞர்கள் முதல் ஆண்டாள் வரை. காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2008.*
11. *வேங்கடராமன். ஹெச்., (உ.ஆ) - நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 1989.*